**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 241/2022**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | கௌரி (PW1) | Caste | |
| Husband's Name | வேல்முருகன் | Calling | |
| Village | திருமுருகன்பூண்டி | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 present, Accused A1 absent petition filed and allowed)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1.நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.04.2022 ஆம் தேதி மாலை 6.30–7.00 மணியிருக்கும் எனது மகன் ராம்குமார் இருசக்கர வாகனத்தை ஓட்ட அவருக்கு பின்னால் எனது கணவரும் என் கணவருக்கு பின்னால் நானும் அமர்ந்து அவிநாசி பெட்ரோல் பங்க் எதிரே சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் அப்பாச்சி இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் நான் கழுத்தில் அணிந்திருந்த செயினை பறிக்க முயன்றார்கள். நான் செயினை இழுத்துப் பிடித்துக் கொண்டதால் விட்டுவிட்டு போய்விட்டார்கள். நாங்கள் அவர்களை பிடிக்க முயற்சி செய்தோம் ஆனால் பிடிக்க முடியவில்லை அதனால் அவிநாசி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்ல சொல்ல என் மகனின் நண்பர் ஒருவர் எழுதினார் அவர் பெயர் தற்போது நினைவில் இல்லை. **புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் அப்பாச்சி வாகனத்தில் வந்து செயின் பறிக்க முயன்ற இரண்டு பேரும் மாஸ்க் அணிந்திருந்ததால் அவர்களை என்னால் அடையாளம் காண முடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

1.நான் சம்பவத்தன்று வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம் ஏதும் அணியவில்லை எனது மகன் தலைக்கவசம் அணிந்திருந்தார். நான் பயணித்த வண்டி குறித்து போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன், முதல் விசாரணையில் கூறவில்லை. எனக்கு படிப்பறிவு இல்லை. போலீஸ் விசாரணையின் போது நான் அணிந்திருந்த நகை தங்க நகை என குறிப்பிட்டு கூறியுள்ளேன்.

2. வழக்கு சம்பவ சமயத்தில் எனது கணவருக்கு கண்ணாடி வாங்குவதற்காக அவிநாசி வந்ததாக போலீசார் விசாரணையில் குறிப்பிட்டு கூறியுள்ளேன். போலீசார் விசாரணையின்போது எனது கணவரின் கண் கண்ணாடி குறித்த ஆவணம் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சம்பவம் நடந்தஇடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல அவிநாசி பெட்ரோல் பங்கிற்கு எதிர்புறம் வழக்கு சம்பவம் நடந்தது.

3. வழக்கு சம்பவ இடம் அதிக போக்குவரத்து நிறைந்த இடமாகும். எதிரிகளின் வயது குறித்து 22 இல் இருந்து 25 க்குள் இருக்கும் என கூறியுள்ளேன் மற்ற விவரங்கள் ஏதும் கூறவில்லை. எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் அப்பாச்சி ரகம் என்று கூறியுள்ளேன் ஆனால் நிறம் மற்றும் பதிவெண் கூறவில்லை. சம்பவ சமயத்தில் களவு போன நகை அணிந்திருப்பதுபோல் புகைப்படம் ஏதேனும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

4. நகையின் வடிவமைப்பு மற்றும் வகைப்பாடு குறித்து போலீசாரிடம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அணிந்திருந்த முககவசத்தின் நிறம் குறித்துகுறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த சுமார் 1 1/2 மணி நேரம் கழித்துதான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட நேரத்தில் எங்கு சென்றேன் என்று போலீசாரிடம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

5. புகார் போலீசார் சொல்ல சொல்ல எழுதப்பட்டது என்றால் சரியல்ல, நான் சொல்ல சொல்ல எழுதப்பட்டது. புகார் கொடுக்க நானும் எனது சின்ன மகனும் சென்றோம். பின்னிட்டு என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். வழக்கு சம்பவம் குறித்து ஒரு முறைதான் என்னை போலீசார் விசாரித்தார்கள். 28.06 தேதியில் எதிரியை

பிடித்த பிறகு அவர் குறித்து அடையாளம் காட்ட ஒரு முறை என்னை அழைத்தார்கள் நான் சென்று எதிரியை அடையாளம் காண்பித்தேன்.

6. போலீசார் அடையாளம் காட்டிய பிறகுதான் எதிரியை எனக்கு அடையாளம் தெரியும் என்றால் சரிதான். நான் சொன்ன வயதில் எதிரிதான் இருந்தார். சம்பவத்திற்கு முன்னால் நான் எதிரியை பார்த்தது இல்லை என்றால் சரிதான். நான் போலீசாரிடம் தவறான நபரை அடையாளம் காட்டியுள்ளேன் என்றால் போலீசாரிடம் இருக்கலாம் என்றுதான் நான் கூறினேன்.

7. சம்பவம் நடந்த இடம் அதிக போக்குவரத்து உள்ள இடம் என்பதால் வழக்கு சம்பவம் நடக்க சாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. வாகனத்தில் நான் எவ்வளவு வேகத்தில் சென்று கொண்டிருந்தேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடத்தில் வேகத்தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது அதனை கடந்துதான் செல்லவேண்டும் என்றால் அதனை நான் சரியாக கவனிக்கவில்லை.

8. உண்மையில் பின்னால் வந்த நபர்கள் இழுத்திருந்தால் நான் கீழே விழுந்திருப்பேன் என்றால் சரியல்ல நாங்கள் மெதுவாகத்தான் சென்றோம் மேலும் தங்க சங்கலியை நான் நன்றாக பிடித்துக் கொண்டதால் கீழே விழவில்லை. உண்மையில் நகை பறிக்கப்பட்டிருந்தால் காயம் ஏற்பட்டிருக்கும் ஆனால் காயம் குறித்து ஏதுவும் குறிப்பிடாத நிலையில் சம்பவம் நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

9. உண்மையில் சம்பவத்தேதியன்று நாங்கள் இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சென்ற நிலையில் சங்கலி பறிப்பு நடந்திருந்தால் கீழே விழுந்திருக்ககூடும் அவ்வாறு இல்லாத நிலையில் வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எதிரியை பின்தொடர்ந்து எதுவரை துரத்தி சென்றதாக போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

10. களவு போன தங்க சங்கிலி வாங்கியதற்கான இரசீது போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் பறிக்க முயன்றதாக கூறப்படும் தங்க சங்கிலியை போலீசார் விசாரணைக்கு உட்படுத்தவில்லை என்றால் போலீசாரிடம் நகையை காண்பித்தேன் கொடுக்கவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம்

இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள்  விடுதலை ஆக தக்கவர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| **சாட்சியின் கையொப்பம்** | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br>VELLINGIRI LOGANATHAN<br>Digitally signed by VELLINGIRI LOGANATHAN Date: 2025.01.21 19:29:14 +0530<br>குற்றவியல் நீதித்துறை  நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/  Defence counsel |